# யூன் – 26 – புதன்

## ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! திபா. 105:1

---

## முதல் வாசகம் : தொடக்க நூல் 15:1–12, 17 - 18

இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், ஆண்டவரின் வாக்கு ஆபிராமுக்கு ஒரு காட்சி வழியாக வந்து அறிவித்தது "ஆபிராம்! அஞ்சாதே. நான் உனக்குக் கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைம்மாறு கிடைக்கும்."அப்பொழுது ஆபிராம், "என் தலைவராகிய ஆண்டவரே, எனக்கு என்னதான் தருவீர்? எனக்கோ குழந்தையே இல்லை! தமஸ்கு நகர் எலியேசர்தான் எனக்குப்பின் என் இல்லத்திற்கு உரிமை மகன் ஆகப்போகிறான்!நீர் எனக்குக் குழந்தை ஒன்றும் தராததால் என் வீட்டு அடிமை மகன் எனக்குப் பின் உரிமையாளன் ஆகப் போகிறான்" என்றார்.அதற்கு மறுமொழியாக, "இவன் உனக்குப்பின் உரிமையாளன் ஆகமாட்டான். ஆனால் உனக்குப் பிறப்பவனே உனக்குப்பின் உரிமையாளன் ஆவான்" என்று ஆபிராமுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து, "வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்" என்றார்.ஆபிராம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.ஆண்டவர் ஆபிராமிடம், "இந்நாட்டை உனக்கு உரிமைச் சொத்தாக அளிக்க உன்னைக் கல்தேயரின் ஊர் என்ற நகரிலிருந்து இங்கு அழைத்து வந்த ஆண்டவர் நானே" என்றார்.அதற்கு ஆபிராம், "என் தலைவராகிய ஆண்டவரே, இதை நான் உரிமையாக்கிக் கொள்வேன் என்பதை எப்படித் தெரிந்து கொள்வேன்?" என்றார்.ஆண்டவர் ஆபிராமிடம், "மூன்று வயதுள்ள இளம் பசு, மூன்று வயதுள்ள வெள்ளாடு, மூன்று வயதுள்ள செம்மறியாடு, ஒரு காட்டுப்புறா, ஒரு மாடப்புறா ஆகியவற்றை என்னிடம் கொண்டுவா" என்றார்.ஆபிராம் இவற்றை எல்லாம் அவரிடம் கொண்டுவந்து, அவைகளை இரண்டிரண்டு கூறுகளாக வெட்டி, ஒவ்வொரு பகுதியையும் அததற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரே வைத்தார். ஆனால் பறவைகளை அவர் வெட்டவில்லை.துண்டித்த உடல்களைப் பறவைகள் தின்ன வந்தபொழுது ஆபிராம் அவற்றை விரட்டிவிட்டார்.கதிரவன் மறையும் நேரத்தில் ஆபிராமுக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது. அச்சுறுத்தும் காரிருள் அவரைச் சூழ்ந்தது.நீ மிகவும் முதிர்ந்த வயதில் அமைதியாக உன் மூதாதையரிடம் சென்றபின், நல்லடக்கம் செய்யப்படுவாய்.நான்காம் தலைமுறையில் அவர்கள் இங்கே திரும்பி வருவர். ஏனெனில் எமோரியர் இழைக்கும் தீமை இன்னும் முழுமை அடையவில்லை" என்றார்.கதிரவன் மறைந்ததும் இருள்படர்ந்தது. அப்பொழுது புகைந்து கொண்டிருந்த தீச்சட்டி ஒன்றும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்தக் கூறுகளுக்கிடையே சென்றன.அன்றே ஆண்டவர் ஆபிராமுடன் ஓர் உடன்படிக்கை செய்து, "எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரத்தீசு பேராறுவரை உள்ள இந்நாட்டை உன்வழிமரபினர்க்கு வழங்குவேன்" என்றார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் தமது உடன்படிக்கைகளை என்றென்றும்
நினைவில் கொள்கின்றார்.

## நற்செய்தி : மத்தேயு 7 : 15 - 20

அக்காலத்தில் இயேசு தம்சீடரை நோக்கிக் கூறியதாவது : போலி இறைவாக்கினரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடம் வருகின்றனர். ஆனால், உள்ளேயோ அவர்கள் கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள்.அவர்களின் செயல்களைக் கொண்டே அவர்கள் யாரென்று அறிந்துகொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ, முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையோ பறிக்க முடியுமா?நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்டமரம் நச்சுக் கனிகளைக் கொடுக்கும். நல்லமரம் நச்சுக் கனிகளைக் கொடுக்க இயலாது. கெட்டமரமும் நல்ல கனிகளைக் கொடுக்க இயலாது. நல்லகனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு நெருப்பில் எறியப்படும்.இவ்வாறு போலி இறைவாக்கினர் யாரென அவர்களுடைய செயல்களைக் கொண்டே இனங்கண்டு கொள்வீர்கள்"

**தியானம்:** இன்றைய கால கட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளையும், இன்றைய தியான வாசகங்களையும் பார்க்கும் பொழுது, இவை யாவும் எமது பாவங்களின் நிமித்தம் நிகழ்கின்றன என்பதையும், இவ்வாறான பாவ வாழ்விலிருந்து விடுபட்டவர்களாக தூய வாழ்வு வாழ எங்களை தயார்படுத்த வேண்டுமென்றும் கூறுகின்றது. இன்று நாங்கள் உலக சிற்றின்பத்திற்கு அடிமைப்படுத்தப் பட்டவர்களாக பணத்தினால் யாவும் செய்துவிட முடியும் என்று இறைவனை மறந்தவர்களாக இரவு பகல் என்று பாராமல் வேலை வேலை அலைந்து திரிகின்றோம். எனவேதான் நற்செய்தி வாசகத்தில் மண்ணுலகில் செல்வத்தை சேர்த்து வைக்க வேண்டாம் விண்ணுலகில் செல்வத்தை சேர்த்து வையுங்கள் என்று கூறுவதைப் பார்க்கின்றோம். (மத் 6:19-21) தற்பொழுது நாங்களே பார்த்துக் கொண்டிருக்கிறோம் பணம், பணம் என்று சேர்த்து வைத்து யாவற்றையும் அனுபவிக்க முடியாமலும், திடீர் மரணங்களினாலும், இயற்கை அழிவுகளினாலும் யாவற்றையும் இழந்துவிடுகின்றோம். எனவேதான் எம் உடலின் ஒவ்வொரு அவயவங்களையும், எமது சிந்தனை, சொல், செயல் யாவும் இறைவனுக்கு உகந்த வகையில் பயன்படுத்தும் பொழுது நாங்கள் ஒளியின் மக்களாக மாற்றமடைவோம். "கண்தான் உடலுக்கு விளக்கு……….அது கெட்டுப் போனால் உடல் முழுவதும் இருளாய் இருக்கும்." (மத்.6:22) எனவே நல்லவற்றைப் பேசவும் நல்லவற்றைப் பார்க்கவும், நல்லவழியில் நடக்கவும், "நானே உலகின் ஒளி" என்று கூறிய இறைமகன் இயேசுவின் வழியில் வாழ்ந்து மற்றவர்களுக்கு ஒளிகொடுத்து வாழ எங்களைத் தயார்படுத்துவோம்.